அது மாதிரி ஏதாவது ஆராய்ச்சி நடைபெற்றதா? அப்படி ஆராய்ச்சி நடைபெற்றதனுடைய கண்டுபிடிப்புகள் ஏதாவது வந்துள்ளதா? இல்லையென்றால், இனிமேலாவது, கண்டுபிடிக்க, அத்தகைய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய புவியியல் பிரிவு 1972–லேயும், 1975-76-லேயும் அந்த பகுதியிலே ஆய்வுகளை மேற்கொண்டது. அந்த அடிப்படையிலேதான் இரும்புத் தாதும் சல்ஃபைட் தாதும் அங்கே இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால், அவற்றின் தரம் மிகக் குறைந்த அளவிலே இருக்கிற காரணத்தினாலேயும்—சல்ஃபைட் அமைப்பு முறையிலே மேல் மட்டத்திலேயிருக்கிறது—வியாபார ரீதியாக அவற்றை 'மைன்' பண்ணுகிற பொழுது லாபகரமாக இருக்காது என்ற காரணத்தாலேயும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி.

* வினா எண். 809—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி 1980–81ல் குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதற்கு என்ன காரணம்?

(இ) 1979–80 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி எவ்வளவு?

(ஈ) அதற்கு முந்தின ஆண்டை விட 1979–80ம் ஆண்டு உற்பத்தி குறைந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ), (ஆ) மற்றும் (இ) : 1979-80-ல் தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி 3.67 இலட்சம் டன்கள். 1980–81-ல் சர்க்கரை உற்பத்தி 3.92 லட்சம் டன்கள் கூடுதலாக 25,000 டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடும்.

(ஈ) 1978–79 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தியைக் காட்டிலும் 1979–80 ஆண்டு உற்பத்தி 1.25 இலட்சம் டன்கள் குறைவு.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்த 1979-ம் ஆண்டில் குறைந்ததற்கு என்ன காரணம்? விவசாயிகளுக்குக் கரும்பு விலையை நியாயமாக அந்த சமயத்தில் உயர்த்திக் கொடுக்காததனால் ஏற்பட்டதா? அல்லது தங்களுடைய உற்பத்தி கெப்பாசிடியை முழுவதும் உபயோகப்படுத்தாததனால் அந்தக் குறைவு ஏற்பட்டதா?

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவர் அவர்களே, 1975–76 ஆம் ஆண்டில் மொத்த சர்க்கரை உற்பத்தி 1·80 லட்சம் டன்னாக இருந்தது. அதற்குப் பின்னாலே படிப் படியாக 4.92 இலட்சம் டன் வரை சென்றது. 1978–79 ஆண்டைப் பொறுத்த வரையில் அந்த ஆண்டு உற்பத்திக் குறை வாக இருந்ததற்குக் காரணம், மத்திய அரசினுடைய கொள்கை யின் அடிப்படையில் சில குறைபாடுகள் ஏற்பட்டன. 35 சத வீதம் வெளி மார்க்கெட்டிலேயும், 65 சதவீதம் லெவி முறையி லேயும் கொடுக்கப்பட்டு வந்த முறை 1978 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. அதன் அடிப்படையில் ஏற்பட்ட நட்டத்தின் காரணமாகவும், வியாபாரிகளுக்கு அதிகமான விலை கொடுக்க முடியாத காரணத்தினாலும், அந்த ஆண்டு அதிகமாகக் கரும்பு பயிரிடாத காரணத்தினாலும், அதனாலே மில்களுக்கு அதிகமான கரும்பு கிடைக்காத காரணத்தாலும், உற்பத்தியிலே குறைவு ஏற்பட்டது.

திரு. கு. ராமனி : தலைவர் அவர்களே, இப்போது 1981–82 ஆம் ஆண்டு என்ன உற்பத்தியை அரசு எதிர்பார்க்கிறது? மேலும் இது போன்று சர்க்கரை விலை ஏற்றமும், தட்டுப்பாடும் இருக் கின்ற சமயத்தில் உற்பத்திக் குறையாமல் இருப்பதற்கு, ஏற் கனவே கிடைத்த அனுபவத்தைக் கொண்டு, உற்பத்தியைத் தொடர்ந்து அதிகப்படுத்திச் செல்வதற்கு என்ன வழிவகைகளை அரசு கண்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, 1980–81 ஆம் ஆண்டு உற்பத்தி 3.92 இலட்சம் டன்னாக இருக்கிறது. இந்த ஆண்டு இன்னும் 25 ஆயிரம் டன்கள் கூடுத லாக உற்பத்திச் செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி எதிர்பார்ப்பதற்கு காரணம் மாநில அரசு 175 ரூபாயாக கரும்பு விலையை, பயிரிடுபவர்களுக்கு உயர்த்திக் கொடுத்து கரும்பு பயிரிடுகின்றவர்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கி அவர்கள் கரும்பை அதிக அளவில் பயிரிடும் வாய்ப்பை உண்டாக்கி இருக்கின்றது. அதன் அடிப்படையில் மில்களுக்குக் கரும்பு அதிக மாகக் கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், உற்பத்தி அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தொழில்துறை மானியத்தில் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற சமயத்தில், நாங்கள் திருப்பித் திருப்பி கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திய நேரத்தில் கூட, நாங்கள் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம். 125 ரூபாய்க்கு மேலும் கொடுக்கும்படி கேட்டிருக்கிறோம் என்றுதான்

சொன்னாரே தவிர, எவ்வளவு கேட்டிருக்கிறோம், அது 150-ஆ, 160-ஆ, அல்லது 180-ஆ, என்று சொல்லவில்லை, சொல்லவும் அவர்கள் தயாராக இல்லை. அப்படியின்றி தமிழ்நாட்டு அரசாங்கம் அப்போது 180 ரூபாய் அல்லது 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற நிலை எடுத்திருக்குமானால், இன்று கரும்பு அதிக விலை கிடைத்து இருக்கும். அதிகமான பேர்கள் உற்சாகமாக கரும்பு உற்பத்தி செய்திருப்பார்கள். இந்த நிலைக்குக் காரணம் தமிழ் நாட்டு அரசாங்கத்தினுடைய கொள்கைதான் என்பதும், சர்க்கரை உற்பத்தி குறைவதற்கு அதுதான் காரணம் என்பதும் அமைச்சர் அறிவார்களா ?

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று முதலிலே மறுப்பதற்கு நான் கடமைப்பட்டு இருக்கிறேன். சென்ற ஆண்டு துணை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசுகின்ற நேரத்தில் அவர்கள் கேட்டார்கள்—எந்த அளவிற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறீர்கள் என்று. நான் அப்போது எந்த அளவிற்குக் கேட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லவில்லை. நான் அப்போது சொன்னது—உயர்த்திக் கேட்டு இருக்கிறோம், ரூ. 125-க்கு மேல் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம், எவ்வளவு ரூபாய் உயர்த்திக் கேட்டிருக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்லாததற்குக் காரணம் மத்திய அரசிடமிருந்து நாம் அதிகமாக எதிர்பார்த்ததுதான். ஆனால் மத்திய அரசாங்கம் ரூ. 125 என்பதை ரூ. 130 என்கிற அளவிற்குத் தான் உயர்த்திக் கொடுத்தது. ஆனால் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அதை ரூ. 175 என்கிற அளவிற்கு உயர்த்தினால்தான் அது விவசாயிகளுக்குக் கட்டுபடியாகின்ற விலையாக இருக்கும், உற்பத்தி அதிகமாக ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்று சொல்லி, அந்த அளவிற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறார்கள். ஆகவே, அரசின் கொள்கையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. கரும்பு பயிரிடுகின்றவர்களுக்குத் தான் அரசு உதவி செய்து இருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது விவசாயிகளுக்கு ரூ. 175 கிடைக்கும் வகையில் கரும்பு விலை உயர்த்தப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். இப்போது விற்கின்ற விலை

யில் அவர்கள் உற்பத்திச் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் டன் ஒன்றுக்கு ரூ. 200 முதல் 210 வரை வருகிறது. ஆகவே, அந்த அளவிற்கு விலையை உயர்த்திக் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா? மேலும் அவர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள், மற்றும் உரங்கள் ஆகியவற்றையும் குறைந்த விலையில் கொடுத்து ஊக்குவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கேள்வியிலே பெரும்பாலான கேள்விகள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கப்பட வேண்டியதாகும். இருந்தாலும் சொல்கிறேன், ரூ. 175 கொடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்போது தான் உத்தரவிட்டு, அந்த விலை உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக பொது மக்களிடத்தில் இருந்து பங்குப் பணத்தை வசூலித்து, கூட்டுறவு முறையில் புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவ அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியது அல்ல.

தஞ்சை மாவட்டத்தில் புதிய சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம்.

***வினா எண். 810—திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் புதிதாக சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த இடத்தில் ஆரம்பிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) மாயூரம் பகுதியிலோ அல்லது சீர்காழி பகுதியிலோ ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.